# පාර්ලිමේන්තු කටයුතු අමාත්‍යාංශය

## பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

## MINISTRY OF PARLIAMENTARY AFFAIRS

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## ANNUAL PERFORMANCE REPORT

# 2013

**අංක 464 බී, පන්නිපිටිය පාර, පැලවත්ත, බත්තරමුල්ල.**
**464பி, பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்தை, பத்தரமுல்ல.**
**No. 464 B, Pannipitiya Road, Pelawatta, Battaramulla.**

# பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2013

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, 464பி, பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்தை, பத்தரமுல்ல.

தொலைபேசி இலக்கம் - 011 2786988 மின்னஞ்சல் முகவரி - **mdpa@sltnet.lk**



**මහින්ද චින්තනයෙන් බිඳක්...............**

රජයේ දිගු කාලීන දැක්ම වන්නේ ආර්ථික අරමුණු ළඟාකරගැනීම, සමාජ සාධාරණත්වය සහතික කරලීම සහ සමාජ ආර්ථික ස්ථායිතාවය ඇති කිරීම සඳහා උපකාරීවන ඵලදායි, සේවා ලාභි සුහදතාවයකින් යුත්, දූෂණයෙන් තොර විනිවිද භාවයෙන් සහ වගකීමෙන් යුත් රාජ්‍ය සේවයක් ස්ථාපනය කිරීමයි.

**மஹிந்த சிந்தனையிலிருந்து ஒரு துளி**

அரசாங்கத்தின் நீண்டகால நோக்கம் யாதெனில் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதும் சமூகத்தில் நியாயத்தை நிலைநாட்டுவதும் சமூகப் பொருளாதாரத்தில் ஸ்தீரத்தன்மையினை ஏற்படுத்தும் வகையில் வினைத்திறனுடைய சேவையை வழங்கும் மனோபாவம் நிறைந்த நியாயமானதும் தெளிவானதுமான பொறுப்புடைய அரசாங்க சேவையை நிலைநாட்டுவதும் ஆகும்.

A thought from “Mahinda Chinthanaya” Concept

Establishing of a people friendly and productive public service free form corruption assuring accountability towards social economic sustainability and social equity ensuring achievement of economic objectives is the long term vision of the government.

## கௌரவ அமைச்சரின் ஆசிச்செய்தி



2013 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கை தொடர்பில் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் ஆசிச்செய்தியை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் விடயப் பரப்புக்கு உரியதான கருமங்கள் மற்றும் கடமைகளாகிய பாராளுமன்றத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவல்களுக்கும் ஏற்புடையதாக அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள், பாராளுமன்ற உறுப்பின்ர்களின் பதவியணிக்கு ஏற்புடைய தாபன அலுவல்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களின் நலன்புரி அலுவல்களுக்கு ஏற்புடையதான அடிப்படைக் கொள்கைகளை வகுத்தல் மற்றும் அவற்றை கட்சி பேதமின்றி நடைமுறைப்படுத்தல் எனது அமைச்சின் கடப்பாடாகும்.

மேன்மைதங்கிய சனாதிபதி இரண்டாவது தடவையாகச் சமர்ப்பித்த “ மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கை” நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு நடவடிக்கை எடுத்தலும் எமக்குரிய பிரதானமானதொரு பொறுப்பாகும். இதன் பொருட்டு மக்கள் சேவைக்காக அர்ப்பணிப்புடனுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பதவியணியின் அறிவு, மனப்பாங்குகள் மற்றும் திறன்களை வளர்க்கின்ற வகையில் செயலாற்றுவதற்கு அமைச்சு எப்போதும் தயாராக உள்ளது.

பாராளுமன்ற முறை, அதற்கு ஏற்புடையதான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் தொடர்பாக அரச அலுவலர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியையும் விழிப்புணர்வூட்டி வருகின்ற அதேவேளை எதிர்வரும் ஆண்டிலும் பாராளுமன்ற சனநாயகம் மற்றும் நல்லாட்சியை வலுப்படுத்தும் முகமாக சமூகமைய அடிப்படையில் மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கும் திட்டமிட்டுள்ளோம் என்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

2013 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையை வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுத்த அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பதவியணிக்கும் எனது பிரத்தியேகப் பதவியணிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சுமேதா ஜீ. ஜயசேன,**
பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்.

## செயலாளரின் ஆசிச்செய்தி



பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் ஒட்டுமொத்த பதவியணியின் சாதகமான மனப்பாங்குகளினதும் செயல் ஊக்குவிப்புடன் கூடிய சேவை அர்ப்பணிப்பினதும் பிரதிபலனாகவுள்ள 2013ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கைக்கு இக் கருத்துக்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

காலத்திற்குக் காலம் இனங்காணப்படுகின்ற சேவைத் தேவைப்பாடுகளை, புதிய அணுகுமுறைகள் ஊடாக சேவை பெறுனர் திருப்தியடையக்கூடிய வகையில் நிறைவேற்றுவதற்கு நாம் நடவடிக்கையெடுத்துள்ளோம்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பௌதீக மற்றும் சேவைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல் மற்றும் அவர்களது பதவியணியின் சார்பில் உரிய சேவை இலக்குகளை நிறைவு செய்தல் தொடர்பிலான தகவல்கள் இவ்வறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியினரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற சேவையை வழங்குவதற்குத் தேவையான இயலுமையை வளர்ச்சியடையச் செய்வதற்கு ஏற்புடையதான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் தொடர்பில் நாம் பாராட்டப்படும் வகையில் மதிப்பிடப்பட்டுள்ளோம். அரசாங்கத்தின் சிரேஷ்ட்ட அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்தி பிரச்சினைகள் மற்றும் அறிவை பரிமாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்றதான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலும் அவ்வாறே மதிப்பிடப்பட்டுள்ளோம்.

மேலும் நல்லாட்சியை தொனிப்பொருளாகக் கொண்ட நூலொன்றை வெளியிட்டு நாட்டினுள் அது பற்றிய விழிப்புணர்வூட்டலைக் கட்டியெழுப்பியமையும் விசேட முக்கியத்துவம் வாய்ந்ததொரு பணியாக பாராட்டுதலுக்கு உள்ளாகியுள்ளது. அந்நூலை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து தமிழ் மக்கள் வாசிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்ததன் மூலம் அரசகரும மொழிக் கொள்கையை வலுப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யக் கிடைத்ததென்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக மனித வள அபிவிருத்தி பற்றிய நூலொன்றை வெளியிடுவதற்கான முன்னெடுப்புகள் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதோடு அதனை 2014 ஆம் ஆண்டில் வெளியிடுவதற்கு உத்தேசித்துள்ளோம்.

நாள்தோறும் வளர்ச்சியடைந்து வருகின்ற தரமானதொரு மனித வளத்தின் விடாமுயற்சியின் ஊடாக எதிர்வரும் ஆண்டில் எமது செயலாற்றுகையை மிக உயர் மட்டத்திற்கு கொண்டுவருதல் எமது ஒருமித்த நோக்கமாகும். இதற்குத் தேவையான பலமும் துணிவும் அனைவருக்கும் கிடைக்கட்டுமாக எனப் பிரார்த்திக்கிறோம்.

கடந்த ஆண்டில் முன்னேற்றத்திற்குத் தோள்கொடுத்த ஒட்டுமொத்த பதவியணிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு கௌரவ அமைச்சரிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் பெரிதும் பாராட்டுகிறேன்.

**பிரின்சி ஜயதுங்க**
செயலாளர்.

## பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

**அலுவலக அமைவிடம்**

பத்தரமுல்ல, பெலவத்த, பன்னிபிட்டிய வீதி, இலக்கம் 464 B எனும் இடத்தில் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு அமைந்துள்ளது.

தொலைபேசி இலக்கம் - 011 2786988 , 011 2177057

தொலைநகல் இலக்கம் - 011 2786968

மின்னஞ்சல் முகவரி - mdpa@sltnet.lk

இணையத்தள முகவரி - www.minparliament.gov.lk

**நோக்கு**

வினைத்திறன்மிக்க மற்றும் பயனுறுதிமிக்க பொதுமக்கள் சேவையை முன்னிட்டு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை வலுவூட்டல்.

**செயற்பணி**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கும் பொதுமக்கள் சேவையை போற்றத்தக்க வகையில் மேற்கொள்வதற்கான உபகார சேவையினை வழங்கல்.

**செயற்பாடுகள்**

- **தேவையான மனிதவள உருவாக்கம்.**
  - ➢ கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பதவியணியை நியமித்தல்
  - ➢ தேவைக்கேற்ப பதவியணியைத் திருத்தல்

- **திறன்கள் நிறைந்த பதவியணியை பெற்றுக்கொடுத்தல்**
  - ➢ கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியினர் மற்றும் ஏனைய ஏற்புடைய அரச அலுவலர்களுக்கான விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- **நிதி வளங்களை வழங்கல்**
  - ➢ கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்கான சம்பளம் வழங்குதல்
  - ➢ சேவை முடிவுறுத்தப்பட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்கான பணிக்கொடையை வழங்குதல்

- **பௌதீக வளங்கள் மற்றும் சேவை வசதிகளை ஏற்படுத்தல்**
  - ➢ அலுவலக உபகரணங்கள் மற்றும் தொடர்பாடல் ஊடகங்களை வழங்குதல்
  - ➢ தீர்வைவரியற்ற வாகன இறக்குமதி உரிமப் பத்திரங்களை வழங்குதல்
  - ➢ கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டுக் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

- **கொள்கை உருவாக்கம்**
  - தேவையான அமைச்சரவை நிருபங்களை முன்வைத்து கொள்கை ரீதியான முடிவுகளை எடுத்தல்.
  - கொள்கை ரீதியான முடிவுகளை நடைமுறைப்படுத்தல்

- **ஏற்புடைய தரப்பினர்களின் இணைப்பின் ஊடாக அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு பங்களிப்புச் செய்தல்**
  - ஏற்புடைய நிறுவனங்களின் இணைப்பாக்கத்தின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் தொகுதிகளினுள் இனங்காணப்பட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
  - தேசத்திற்கு மகுடம், வாழ்வின் எழுச்சி போன்ற அரச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்தல்

## அறிமுகம்

"PARLIAMENT" என்பது "PARLE"என்ற பிரெஞ்சுச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். அதன் பொருள் ''கலந்துரையாடல்'' என்பதாகும்.

ஒரு நாட்டின் மக்களை ஆட்சிபுரிவதற்காகவும், அவர்களது தேவைகளை ஒழுங்கான விதத்தில் நிறைவேற்றுவதற்காகவும் முறைசார்ந்ததொரு சட்ட முறைமை அமையப்பெற்றிருத்தல் வேண்டும். இவ்விடயத்தை நிறைவேற்றுவதற்கு மக்களின் நேரடித் தலையீடு நடைமுறைச்சாத்தியமானதல்ல என்பதால் தமது பிரதிநிதிகளைக் கொண்டதொரு குழுவின் மூலம் இதனை நிறைவேற்றிக்கொள்ளல் சனநாயக நாடொன்றில் காணப்படுகின்ற மரபாகும்.

விரிவான விதத்தில் நோக்குகின்றபோது ஒரு நாட்டின் சட்ட முறைமையை அமைப்பதற்கும் பொதுமக்களின் தேவைக்கிணங்க அவற்றைத் திருத்துவதற்கும் மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவு செய்து நியமிக்கப்படுகின்ற ஒரு குழுவென வரைவிலக்கணமளிக்கலாம். பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்ட போதிலும் சட்டவாக்க சபை தொடர்பில் சனநாயக நாடுகளில் மேற்படி அடிப்படை எண்ணக்கருவே காணப்படுகின்றது.

பண்டைய காலத்தில் அநேகமான நாடுகளில் பல்வேறான காலகட்டங்களிலும் கலந்துரையாடி இணக்கப்பாட்டுடன் தீர்மானங்களை எடுக்கின்ற நடைமுறையே காணப்பட்டது. இலங்கையிலும் இவ்வாறானதொரு ஆட்சி முறை நிலவியமைக்கு தெளிவான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. உதாரணமாக, பொலனறுவைக் காலகட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட ''நிஷ்ஷங்க லதா மண்டபம்'' மன்னரினதும் அமைச்சரவையினதும் கலந்துரையாடல்கள் மற்றும் இணக்கப்பாடுகளை முன்னிட்டு உருவாக்கப்பட்டதொன்றாகும். இங்கு மிகவும் மூப்புநிலை அமைச்சர்களுக்காக மன்னருக்கு அண்மையிலேயே முன்வரிசை ஆசனங்கள் போடப்பட்டிருந்ததெனவும் ஏனைய அமைச்சர்களுக்கு பின் வரிசையில் ஆசனங்கள் போடப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான தெளிவானதொரு கட்டட வரைபடமும் காணப்பட்டது. மேலுமொரு தெளிவான உதாரணம், கண்டி ''மகுல் மண்டபமாகும்''

உலக வரலாறை நோக்குகின்றபோது பாராளுமன்ற ஆட்சி முறையின் ''தாய்'' எனக் கருதப்படுகின்ற பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கு நீண்டதொரு வரலாறு உள்ளதோடு, இலங்கையின் பாராளுமன்ற முறையின் படிப்படியான வளர்ச்சியிலும் அது செல்வாக்குச் செலுத்தியுள்ளதென்பது வரலாற்றுத் தகவல்களை ஆராய்கின்றபோது தெளிவாகின்றது.

தற்காலத்தில் பாராளுமன்றமானது சட்டங்களை ஆக்குகின்றதும் நிதி முகாமைத்துவப் பொறுப்பை ஏற்றுள்ளதுமான அதிஉயர் நிறுவனமாகக் கருதப்படுகின்றது. இலங்கையின் பாராளுமன்றமானது அதிஉயர்வானதும் இறைமையுடன் கூடியதுமான சட்டவாக்க சபையாகும்.

1931 இல் டொனமூர் அரசியலமைப்பின் மூலம் சர்வஜன வாக்குரிமை மற்றும் நிறைவேற்றுக் குழு முறை அறிமுகப்படுத்தப்பட்டமை அரசியலமைப்பு வளர்ச்சி வரலாற்றில் திருப்புமுனையொன்றைக்

குறிப்பிடுகின்றது. 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து ''வெஸ்ட்மினிஸ்டர்'' முறையிலான அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட்டது. பாராளுமன்ற ஆட்சி முறையை அன்றிலிருந்தே தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளது. 1972 இல் குடியரசாக மாற்றமடைந்ததைத் தொடர்ந்து இலங்கை டொமினியன் முறையிலிருந்து மீண்டதோடு, அதற்கிணங்க செனெற் சபையும், மகாதேசாதிபதி பதவியும் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பெயரளவிலான சனாதிபதிப் பதவி அறிமுகப்படுத்தப்பட்டது. 1978 இல் நிறைவேற்றப்பட்ட புதிய அரசியலமைப்பின் மூலம் மேற்படி சனாதிபதிப் பதவி நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதிப் பதவியாக மாற்றப்பட்டது.

''வினைத்திறன்மிக்கதும் விளைவுத்தாக்கம்மிக்கதுமான பொதுசன சேவையை முன்னிட்டு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை வலுவூட்டும்'' நோக்கத்துடன் 1970 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு மௌனமாக பொதுசன சேவையை ஆற்றுகின்ற ஓர் அமைச்சாகும்.

கௌரவ கே.பி. ரத்நாயக்க அவர்கள், விளையாட்டுத்துறை, பாராளுமன்ற அமைச்சராக, இவ்வமைச்சுக்குப் பொறுப்பான முதலாவது அமைச்சராக (1970-1977) பணிபுரிந்தார். பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் வரலாற்றில் மிக நீண்ட காலம் அமைச்சர் பதவியை ஏற்றிருந்த கௌரவ வின்ஸ்ரன் பெரேரா அவர்கள் 1977 முதல் 1990 வரை விளையாட்டுத்துறை/ நீதி/ சுற்றாடல் ஆகிய துறைகளை ஒன்றிணைத்து, இந்த அமைச்சை மிகவும் பலம் பொருந்தியதொரு நிறுவனமாக மாற்றுகின்ற வகையில் பணிபுரிந்தார். கௌரவ கலாநிதி விமல் விக்கிரமசிங்க அவர்கள் (1993-1994) சுற்றாடல் அமைச்சுடனும் கௌரவ ரத்னசிறி விக்கிரமநாயக்க அவர்கள் (1994-1997) பொது நிருவாக/ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுடனும் கௌரவ ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே அவர்கள் (1997-2000) திட்ட அமுலாக்கல் அமைச்சுடனும், கௌரவ எஸ்.பீ. திசாநாயக்க சமுர்த்தி, கிராமிய அலுவல்கள் மற்றும் மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சுடனும் கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்கள் (2001) மகாவலி அபிவிருத்தி அமைச்சுடனும் ஒன்றிணைத்து, கௌரவ உறுப்பினர்களுக்கு உச்சமட்ட சேவையை வழங்குகின்ற வகையில் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சை செயற்படுத்தினார்கள்.

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் வரலாற்றில் விசேட திருப்புமுனையொன்றை குறிக்கின்ற வகையில் 2001.12.12 ஆம் திகதி கௌரவ ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களின் கீழ் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு தனியானதொரு அமைச்சாக மாறியது. பின்னர் கௌரவ மில்ரோய் பர்னாந்து அவர்களின் கீழும் (2004-2005), கௌரவ பேராசிரியர் விஷ்வா வர்ணபால அவர்களின் கீழும் (2006-2007), கௌரவ அல்ஹாஜ் ஏ.எச்.எம். மொஹமட் அவர்களின் கீழும் (2007-2010) நிர்வகிக்கப்பட்டு வந்த இவ்வமைச்சு 2010 ஆம் ஆண்டு முதல் கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன அவர்களின் கீழ், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

விரிவானதும், வினைத்திறன்மிக்கதும் விளைவுத்தாக்கம்மிக்கதுமான பல சேவைகளை வழங்கி செயற்பட்டு வருகின்றது.

இங்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியினரை நியமித்து அவர்களுக்கான சம்பளம் மற்றும் பணிக்கொடையினை வழங்குதல், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரிச்சலுகை அடிப்படையிலான வாகன இறக்குமதி உரிமப்பத்திரங்களை வழங்குதல், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டுக் காப்புறுதித் திட்டத்தினை செயற்படுத்துவதன் ஊடாக வைத்திய மற்றும் திடீர் விபத்துப் பணிக்கொடைகளைப் பெற்றுக் கொடுத்தல் குறிப்பாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியினருக்கு பயிற்சி அளித்தல் போன்ற சேவைகளை வழங்குதல் மூலம் கௌரவ உறுப்பினர்களுக்கு உச்ச அளவிலாள சேவையை வழங்குவதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. 2013 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக எமது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் பற்றிய விபரங்கள் இச் செயலாற்றுகை அறிக்கையின் மூலம் முன்வைக்கப்படுகின்றது.

## பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிப் பிரிவு

பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியின் தாபன நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இந்தப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசின் பேரில் இப் பதவியணியினர் நியமிக்கப்படுகின்றனர். இவ்வாறு நியமிக்கப்படும் பதவியணியினரின் பதவிகள் வருமாறு.

01. செயலாளர்
02. தட்டெழுத்தாளர்
03. அலுவலக உதவியாளர்
04. சாரதி
05. ஆராய்ச்சி உதவியாளர்

    இதற்கு வேலையற்ற பட்டதாரி உத்தியோகத்தர் அல்லது அரச சேவையில் பணியாற்றும் பட்டதாரி உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துக் கொள்ள முடியும்.

இப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படும் கடமைகள் பின்வருமாறு.

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசின் பேரில் பதவியணியை நியமித்தல் மற்றும் சேவையை முடிவுறுத்தல்.
- அரச சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தராயின் அச்சேவையிலிருந்து விடுவித்தல், நிரந்தர சேவை நிலையத்துக்கு மீண்டும் இணைத்தல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்கு சம்பளம் வழங்குவதற்குத் தேவையான தரவுகளை நிதிப் பிரிவுக்கு பெற்றுக் கொடுத்தல்.
- சம்பள மீளளிப்புக்கான கொடுப்பனவுச் சிட்டைகளைத் தயாரித்தல்
- செயலாற்றுகை மதிப்பீட்டு நடவடிக்கைகள்
- பிரத்தியேகப் பதவியணியினருக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்
- தகுதி பெற்றோருக்கான பணிக்கொடைக்கான கொடுப்பனவுச் சிட்டைகளைத் தயாரித்தல்
- பண்டிகைக் கால முற்பணக் கொடுப்பனவுக்கான கொடுப்பனவுச் சிட்டைகளைத் தயாரித்தல்
- பயணச் செலவுக் கொடுப்பனவுச் சிட்டைகளைத் தயாரித்தல்

**2013 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியினை நியமித்தல் மற்றும் சேவையை முடிவுறுத்தல்**

| பதவி | 2013 | | |
|---|---|---|---|
| | நியமனம் | முடிவுறுத்தல் | சேவையில் ஈடுபட்டிருந்த எண்ணிக்கை |
| ஆராய்ச்சி உதவியாளர் (அரச சேவையில் இல்லாத) | 36 | 15 | 63 |
| ஆராய்ச்சி உதவியாளர் (அரச சேவையில் உள்ள) | 14 | 13 | 89 |
| செயலாளர் | 45 | 43 | 220 |
| தட்டெழுத்தாளர் | 43 | 44 | 220 |
| சாரதி | 52 | 46 | 215 |
| அலுவலக உதவியாளர் | 36 | 36 | 221 |

2013 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு சேவையிலிருந்த மொத்த எண்ணிக்கை 1028.
2013 ஆம் ஆண்டில் பதவியணியினருக்கு 94 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

**நல்லாட்சி நூலின் தமிழ் மொழிபெயர்ப்பை வெளியிடுதல்.**

அரசகரும மொழிக் கொள்கை தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்ற வகையில், 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ''அன்பான அழைப்பு உங்களுக்கே'' எனும் நூல் இவ்வாண்டினுள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டது. நல்லாட்சி பற்றிய செய்தியை தமிழ் மக்களுக்கு மத்தியில் கொண்டுசெல்லும் நோக்கத்துடன் 2013 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் வைபவ ரீதியில் வெளியிடப்பட்டது. இதன்போது கிடைத்த பிரதிபலிப்பானது மிகவும் பாராட்டத்தக்கதாகும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

**கௌரவ உறுப்பினர்களின் பிரத்தியேக பதவியணியிருக்கான பயிற்சியளிப்பு**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளை விளைவுத்தாக்கம்மிக்க விதத்திலும் வினைத்திறன்மிக்க விதத்திலும் நிறைவேற்றுவதற்கு அவர்களது பிரத்தியேகப் பதவியணியினர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வாறு ஒத்துழைப்பது என்பது தொடர்பில் பயிற்சியளிப்பதற்காக இவ்வமைச்சினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத் தொடரொன்று நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கனணிப் பயன்பாடு, அலுவலக நடைமுறை, நல்லாட்சி, பாராளுமன்றக் கடமைப் பொறுப்புகள், பொதுசனத் தொடர்பு, உற்பத்தித்திறன் மற்றும் 5S எண்ணக்கரு மற்றும் மனித உரிமைகள் ஆகிய விடயங்கள் உள்ளடங்குகின்றன. இப் பாடநெறிகளை நடாத்துகின்போது இலங்கைப் பாராளுமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய உற்பத்தித்திறன் செயலகம் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் ஆகியவற்றின் ஒத்துழைப்பு பெறப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற மோட்டார் வாகன விபத்துகள் தொடர்பாகவும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்தி, ஒழுக்கம் பேணுகின்ற சாரதிகளை உருவாக்கும்

நோக்கத்துடன் கொழும்பு மோட்டார் வாகனப் பொலீசாரின் வளப்பகிர்வுடன் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் சாரதிப் பதவியணிக்கு பயிற்சியளிக்கின்ற விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

| **ஆற்றல் வளர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2013** | | | | | |
|---|---|---|---|---|---|
| **தொடர் இல.** | **மாதம்** | **மாவட்டம்** | **பங்குபற்றிய குழு** | **நாட்கள்** | **இடம்** |
| 01 | பெப்ரவரி | காலி<br>மாத்தறை<br>அம்பாந்தோட்டை | பா.உறுப்பினர் பதவியணி | 02 | தென் மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிலையம் - வக்வெல்ல |
| 02 | பெப்ரவரி | காலி<br>மாத்தறை<br>அம்பாந்தோட்டை | பிரதேச செயலாளர்கள் | 01 | தென் மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிலையம் - வக்வெல்ல |
| 03 | மே | புத்தளம்<br>குருணாகல் | பா.உறுப்பினர் பதவியணி | 02 | வடமேல் மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிலையம் - வாரியபொல |
| 04 | மே | புத்தளம்<br>குருணாகல் | பிரதேச செயலாளர்கள் | 01 | வடமேல் மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிலையம் - வாரியபொல |
| 05 | ஜுன் | அனுராதபுரம்<br>பொலனறுவை<br>பதுளை<br>களுத்துறை | சாரதிகள் | 01 | நிர்மாணிப்பு, இயந்திர உபகரணங்கள் பயிற்சி நிறுவனம் - பெலவத்தை |
| 06 | ஜுன் | யாழ்ப்பாணம்<br>வன்னி | சாரதிகள் | 01 | நிர்மாணிப்பு, இயந்திர உபகரணங்கள் பயிற்சி நிறுவனம் - பெலவத்தை |
| 07 | ஆகஸ்ட் | - | அமைச்சுப் பதவியணி | | சமனலவெவ சமுர்தி நிறுவனம் |
| 08 | செப்தெம்பர் | இரத்தினபுரி<br>கேகாலை | பா.உறுப்பினர் பதவியணி | 02 | வ/ப இரத்தினபுரி மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்க கேட்போர் கூடம் |
| 09 | செப்தெம்பர் | இரத்தினபுரி<br>கேகாலை | பிரதேச செயலாளர்கள் | 01 | வ/ப இரத்தினபுரி மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்க கேட்போர் கூடம் |
| 10 | திசெம்பர் | திருகோணமலை<br>திகாமடுல்ல<br>மட்டக்களப்பு | பா.உறுப்பினர் பதவியணி | 02 | முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களம் - உப்புவேலி |
| 11 | திசெம்பர் | - | அசைச்சுப் பதவியணி | 01 | கல்கிசை |

மேலும், சிரேஷ்ட பதவிநிலை அலுவலர்களுக்கு பாராளுமன்றக் குழுக்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் பற்றிய ஒருசில நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கைப் பாராளுமன்றத்தினதும் உதவியோடு நடத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பிரதேச ரீதியில் சேவையாற்றுகின்ற பதவிநிலை அலுவலர்களுக்காக 2013 பெப்ரவரி (தென் மாகாணம்), 2013 மே (வடமேல் மாகாணம்), 2013 செப்தெம்பர் (சப்பிரகமுவ மாகாணம்) ஆகிய மதங்களில் நடத்தப்பட்டது.

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சேவை வழங்கல் பிரிவு**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் பொதுமக்களை முன்னிட்டு செய்யப்படுகின்ற சேவைகளை மிக இலகுவான விதத்திலும் வினைத்திறனுடனும் நிறைவேற்றுவதற்காக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் நலனோம்புகையின் பொருட்டு இவ்வமைச்சின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சேவை வழங்கல் பிரிவின் மூலம் 2013 ஆம் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட சேவைகளின் முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

01. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் போக்குவரத்து வசதிக்காக வாகனங்களைப் பெற்றுக்கொடுத்தல்.

v. 12வது பாராளுமன்றத்தினதும் 13வது பாராளுமன்றத்தினதும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வமைச்சினால் வழங்கப்பட்ட வாகனங்களில் 2013 ஆம் ஆண்டளவில் 03 வாகனங்கள் தேய்மானப் பெறுமதி செலுத்தி முடிக்கப்பட்டதன் பின்னர் குறித்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களுக்கு கையளிக்கப்பட்டன.

vi. 2013 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக தற்போது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களால் தேய்மான அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள 05 வாகனங்களுக்கு மூன்றாம் தரப்பினர் காப்புறுதியும் 05 வாகனங்களுக்கு இலவச வருமான உரிமப் பத்திரமும் வழங்கப்பட்டன.

vii. இவ்வமைச்சினால் 12வது பாராளுமன்றத்தினதும் 13வது பாராளுமன்றத்தினதும் கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கான தேய்மானப் பெறுமதியாக 2013 ஆம் ஆண்டில் ரூபா 697,972.80 அறவிடப்பட்டுள்ளது.

viii. தீர்வை வரியற்ற வாகன உரிமப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு 2005 ஆகஸ்ட் 31 மற்றும் 2007 ஒக்றோபர் 03 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இவ்வமைச்சினால் 2013 ஆம் ஆண்டினுள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் 06 பேருக்கு தீர்வை வரியற்ற வாகன இறக்குமதி உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

02. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டுக் காப்புறுதித் திட்டம்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டுக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ரூபா இரண்டு இலட்சம் உச்ச எல்லைக்கு உட்பட்ட விதத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான ஆஸ்பத்திரிக் கட்டணம், மருத்துவ பரிசோதனை (ரூபா 6000/-) மற்றும் மூக்குக் கண்ணாடி (ரூபா 5000/-) பெற்றுக்கொள்ளும் பொருட்டு காப்புறுதி நலன்கள் செலுத்தப்படுகின்றன.

2013.01.01 முதல் 2013.12.31 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்ட காப்புறுதி நலன்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 92

செலுத்தப்பட்ட மொத்த நலன்கள் தொகை ரூபா 8,360,303.00

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான திடீர் விபத்துக் காப்புறுதி.

இதன் கீழ் திடீர் விபத்தின்போது அல்லது பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக இறக்கின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சார்பில் சந்தர்ப்பத்திற்கேற்ப ரூபா ஐந்து மில்லியன் தொகை வழங்கப்படும். என்பதோடு, இவ்வாண்டைப் பொறுத்தவரை அத்தகைய சந்தர்ப்பங்கள் எழவில்லை.

03. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை அலுவலக உபகரணங்களை வழங்குதல்.

இவ்வமைச்சினால் மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கனணி இயந்திரம், ஒரு நிழற் பிரதியெடுத்தல் இயந்திரம், ஒரு தொலை நகல் இயந்திரம் மற்றும் ஒரு செல்லிடத் தொலைபேசி ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 350,000/- நிதி ஏற்பாடு ஒதுக்கப்படுவதோடு, இதற்காக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து மொத்த பணத் தொகையில் அண்ணளவாக 17% அறவிடப்படுகின்றது. இதற்கமைய 2013 ஆம் ஆண்டினுள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் 104 பேருக்கு கருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 33,462,164/- தொகை செலவிடப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் பின்வரும் கருவிகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சேவை வழங்கல் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

| | **கருவியின் வகை** | **வழங்கப்பட்டுள்ள அளவு** |
|---|---|---|
| v. | கனணி இயந்திரம் | 94 |
| vi. | நிழற் பிரதியெடுத்தல் இயந்திரம் | 96 |
| vii. | தொலை நகல் இயந்திரம் | 96 |
| viii. | செல்லிடத் தொலைபேசி | 93 |

04. முன்னேற்ற மீளாய்வுச் செயற்பாடுகள்

iv. வருடாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

v. அமைச்சின் நிர்வாக அறிக்கையைத் தயாரித்தல்

vi. வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்.

**நிதிப் பிரிவு**

அமைச்சிற்கு திறைசேரியினால் ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகளை வருடாந்த மதிப்பிடப்பட்ட அலுவல்களுக்காக முறையாகவும் சிறந்த முகாமைத்துவத்துடனும் செலவிடுவதன் மூலம் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஒருங்கிணைத்தல், ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் ஏனைய கணக்கு அறிக்கைகளைப் பேணிவருதல் என்பன இந்தப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதானமான கடமைகளாகும்.

மேலும்,

- பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்கு சம்பளம் வழங்கல், சேவை முடிவுறுத்தப்பட்ட பதவியணியினருக்கு பணிக்கொடை வழங்கல், பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்கான பயிற்சித் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உபகரணங்களை வழங்குவதற்கான காசோலைகளை வழங்கல்
- அமைச்சின் அனைத்துக் கொடுப்பனவு நடவடிக்கைகளையும் இணைப்பாக்கம் செய்து நிதி நிர்வாகத்தை மேற்கொள்ளல்
- செலவுகளைக் கணக்கீடு செய்தல் மற்றும் மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகளை திறைசேரிக்கு சமர்ப்பித்தல்
- அரச அலுவலர்களின் முற்பண கணக்கை பேணிவருதல்
- வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கச் செய்தல்
- உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளைப் பேணிவருதல் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளைத் தயாரித்தல்
- கணக்காய்வு விசாரணைகளுக்கு ஏற்புடைய அலுவல்களை மேற்கொள்ளல் ஆகியன இப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் கருமங்களாகும்.

நிதிப் பிரிவு

2013.12.31 ஆம் திகதி உள்ளவாறு மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினம் பற்றிய அறிக்கை

| | நிகழ்ச்சித்திட்டம் 01 ரூபா | நிகழ்ச்சித்திட்டம்02 ரூபா | மொத்தச் செலவு ரூபா |
|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| சம்பளம்/வேதனம் | 4,714,151 | 12,092,020 | 16,806,171 |
| மேலதிக நேர வேலை/விடுமுறை தின சம்பளம் | 1,193,875 | 771,791 | 1,965,666 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 2,761,592 | 301,689,564 | 304,451,156 |
| பிரயாணச் செலவு - உள்நாடு | 687,488 | 237,857 | 925,345 |
| பிரயாணச் செலவு - வெளிநாடு | 26,474 | - | 26,474 |
| எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 115,680 | 774,286 | 889,966 |
| எரிபொருள் | 6,135,781 | 1,940,799 | 8,076,580 |
| உணவு மற்றும் சீருடை | 1,200 | 52,387 | 53,587 |
| ஏனைய வழங்கல்கள் | | 9,400 | 9,400 |
| வாகன பராமரிப்புச் செலவு | 2,164,006 | 878,215 | 3,042,221 |
| இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணப் பராமரிப்பு | 8,800 | 235,114 | 243,914 |
| கட்டிடம் மற்றும் நிர்மாணிப்புப் பராமரிப்பு | - | - | - |
| போக்குவரத்துச் சேவை | - | - | - |
| தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் | 622,249 | 971,345 | 1,593,594 |
| மின்சாரம் மற்றும் நீர் | 26,140 | 2,116,643 | 2,142,783 |
| குத்தகைக் கூலி மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான வரிகள் | 200,000 | 6,843,808 | 7,043,808 |
| ஏனைய சேவைகள் | 499,544 | 13,958,736 | 14,458,280 |
| ஓய்வூதிய நலன்கள் | | 10,890,929 | 10,890,929 |
| அரச ஊழியர்களுக்கான ஆதனக்கடன்/ வட்டி | | 264,811 | 264,811 |
| மொத்தம் | **19,156,980** | **353,727,705** | **372,884,685** |
| **மூலதனச் செலவினம்** | | | |
| **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | | | |
| கட்டிடம்/நிர்மாணிப்பு | - | - | - |
| இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்கள் பராமரிப்பு | | 215,672 | 215,672 |
| வாகனங்கள் | 708,867 | 660,222 | 1,369,089 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | | |
| வாகனங்கள் | 7,783,655 | - | 7,783,655 |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 925,000 | 504,149 | 1,429,149 |
| இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 200,000 | 736,200 | 936,200 |
| **மூலதன மாற்றல்கள்** | | | |
| அபிவிருத்தி உதவிகள் | - | 33,462,164 | 33,462,164 |
| **மனித வள அபிவிருத்தி** | | | |
| பயிற்சி அளித்தல் மற்றும் திறன் விருத்தி | - | 4,743,630 | 4,743,630 |
| மொத்தம் | **9,617,522** | **40,322,037** | **49,939,559** |

**பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**
**2013 நிதி முன்னேற்றம்**

| **(1) மீண்டுவரும் செலவினம்** | **தேறிய ஏற்பாடுகள் (ரூபா)** | **செலவினம் (ரூபா)** | **நிதி முன்னேற்றம்** |
|---|---|---|---|
| சம்பளம் / வேதனம் | 16,806,172 | 16,806,171 | 99.9% |
| ஏனைய மீண்டுவரும் செலவினம் | 356,193,828 | 356,078,513 | 99.9% |
| மொத்த மீண்டுவரும் செலவினம் | 373,000,000 | 372,884,685 | 99.9% |
| | | | |
| **(2)மூலதன செலவினம்** | | | |
| | | | |
| **(i) மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | **2,600,000** | **1,584,761** | **60.9%** |
| கட்டடங்கள் நிர்மாணம் | 0 | 0 | |
| இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள் | 300,000 | 215,672 | |
| வாகனங்கள் | 2,300,000 | 1,369,089 | |
| | | | |
| **(ii) மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு** | **10,386,150** | **10,149,004** | **97.7%** |
| வாகனங்கள் | 8,000,000 | 7,783,655 | |
| தளபாடங்கள்,அலுவலக உபகரணங்கள் | 1,429,150 | 1,429,149 | |
| இயந்திரங்கள்,இயந்திர உபகரணங்கள் | 957,000 | 936,200 | |
| | | | |
| **(iii) மூலதன மாற்றல்கள், அபிவிருத்தி உதவிகள்** | **34,106,000** | **33,462,164** | **98.1%** |
| பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உபகரணங்கள் வழங்கல் | 34,106,000 | 33,462,164 | |
| | | | |
| **(iv) மனித வள அபிவிருத்தி** | **4,907,850** | **4,743,630** | **96.6%** |
| பயிற்சி, திறன் விருத்தி | 4,907,850 | 4,743,630 | |
| | | | |
| மொத்த மூலதன செலவினம் | 52,000,000 | 49,939,559 | 96.0% |

**பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**
**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு 2013**

| | செலவின உச்ச எல்லை (ரூபா) | பெறுகைகளின் குறைந்த எல்லை (ரூபா) | பற்று மீதியின் உச்ச எல்லை (ரூபா) |
|---|---|---|---|
| **அங்கீகரிக்கப்பட்ட எல்லை** | 6,000,000 | 2,000,000 | 21,500,000 |
| **வருட இறுதியில் உண்மைப் பெறுமதி** | 3,818,654 | 4,324,331.05 | 8,324,795.95 |

## நிருவாகப் பிரிவு

அமைச்சின் விடயப்பரப்புக்கு உட்பட்ட சகல நிருவாக மற்றும் தாபன அலுவல்களையும் சிறந்த முறையில் ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்தல் மற்றும் இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் நிருவாகப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- பாராளுமன்ற ஆலோசனைக் குழு சம்பந்தப்பட்ட அலுவல்கள்
- ஜனாதிபதிச் செயலகம், பிரதம அமைச்சரின் அலுவலகம், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடனான இணைப்பாக்க நடவடிக்கைகள்
- அமைச்சுப் பதவியணியின் பொது நிருவாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சு உத்தியோகத்தர்களின் தாபன அலுவல்களை மேற்கொள்ளல்
- உத்தியோகத்தர்களின் பதவிவழிக் கோப்புக்களை பேணி வருதல் மற்றும் இற்றைப்படுத்தல்
- கௌரவ அமைச்சரின் பிரத்தியேகப் பதவியணியின் தாபன அலுவல்கள்
- அமைச்சுப் பதவியணியினருக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்
- அமைச்சுப் பதவியணியினருக்கு தேவைகளின் அடிப்படையில் கடன்களை அங்கீகரித்தல்
- அமைச்சுக்குரிய சகல வாகனங்களையும் பராமரித்தல் மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்தல்
- அமைச்சின் சகல பிரிவுகளிலும் சேவையாற்றும் பதவியணிக்கு தமது சேவையினை சிறந்த மனநிலையுடன் உச்ச அளவில் மேற்கொள்ளக்கூடிய வகையில் சுற்றுச் சூழலை ஏற்படுத்தல்
- நாளாந்த தபாலினை முறைசார்ந்த விதத்தில் விநியோகித்தல், வெளியாருக்கான தபாலினை ஒழுங்காக விநியோகித்தலின் ஊடாக நிருவாகத்தினை வினைதிறனுடையதாக்குதல்
- அமைச்சின் பதவியணிக்குப் பயிற்சி அளித்தல்
- அமைச்சின் சகல கொள்வனவு வழங்கல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்

## கணனிப் பிரிவு

- அமைச்சின் கணனித் தொகுதியை இற்றைப்படுத்திப் பேணி வருதல் மற்றும் அதற்குரிய மின்னியல், இலத்திரனியல் துணைப்பாகங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவல்கள் அடங்கிய தரவுத் தளத்தினை இற்றைப்படுத்தி பேணி வருதல் மற்றும் அமைச்சின் தேவைக்கேற்ப பல்வேறு தகவல்களுடன் கூடிய அறிக்கைகளைத் தயாரித்தல்
- இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் போன்றவற்றினை வினைதிறன் மிக்க வகையில் பேணி வருதல்
- ஈ-ஸ்ரீலங்கா அரச வலையமைப்புத் திட்டத்தினூடாக வழங்கப்பட்டுள்ள கணனி வலையமைப்பினை பேணி வருதல்
- அமைச்சின் விடயப்பரப்புக்குட்பட்ட தகவல்கள் அடங்கிய தரவுத் தளமொன்றை பேணி வருதல் மற்றும் கணனி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்
- அலுவலக உத்தியோகத்தர்களின் கணனிகளினூடான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேகப் பதவியணிக்கு கணனிப் பயிற்சியினை பெற்றுக் கொடுத்தல்
- அமைச்சின் ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- அமைச்சின் இணையத்தளத்தை (www.minparliament.gov.lk) பேணி வருதல்.

**பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி**

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | இருப்பிலுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 | - |
| மேலதிக செயலாளர் | 01 | 01 | - |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 01 | 01 | - |
| பிரதம கணக்காளர் | 01 | 01 | - |
| பணிப்பாளர் | 01 | 01 | - |
| உதவிச் செயலாளர் | 01 | - | 01 |
| கணக்காளர் | 01 | 01 | - |
| கணக்காளர் (உள்ளக கணக்காய்வு) | 01 | - | 01 |
| (ஆங்கிலம்/தமிழ்) | 02 | - | 02 |
| நிர்வாக உத்தியோகத்தர்(அ.மு.உ.சே-அதி.வ) | 01 | 01 | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 20 | 13 | 07 |
| கொள்வனவு வழங்கல் உதவியாளர் | 01 | 01 | - |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 06 | 06 | - |
| நிதி உதவியாளர் | 03 | 03 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 04 | 03 | 01 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 02 | - |
| வரவேற்பு உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| அலுவலக சேவையாளர் சேவை | 09 | 09 | - |
| சாரதி சேவை | 10 | 07 | 03 |
| **மொத்தம்** | **68** | **53** | **15** |

## 2013 ஆம் ஆண்டினுள் அமைச்சின் பதவியணியிலான மாற்றங்கள்

ஆட்சேர்க்கப்பட்ட புதிய உத்தியோகத்தர்கள்

| பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| 01. திரு. ஆர்.எம்.டீ.பி. ரத்நாயக்க | அ.சே.ஊ. III | 2013.12.02 |

இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்

| பெயர் | பதவி | இடமாற்றம் பெற்ற திகதி |
|---|---|---|
| 01. திருமதி எல்.ஜீ.பீ. ஹேமந்தி | அ.மு.உ.II | 2013.01.01 |
| 02. திருமதி எம்.ஏ.ஜீ.என். மலலசிங்க | அ.மு.உ. III | 2013.01.01 |
| 03. திரு. ஈ.வீ. நலின் பிரசன்ன | சாரதி III | 2013.03.18 |
| 04. திருமதி ரஷிகா மஹவிதான | அ.மு.உ. II | 2013.08.13 |
| 05. திரு. பி.ஜே. ஜீவசாந்த | சாரதி I | 2013.07.31 |
| 06. திரு. ஆர்.ஏ.எஸ். செனெவிரத்ன | அ.சே.ஊ. III | 2013.09.03 |

கடமைக்கு சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| பெயர் | பதவி | சமுகமளித்த திகதி |
|---|---|---|
| 01. திருமதி டீ. சுனேத்ரா வெத்தசிங்க | அ.மு.உ. II | 2013.01.04 |
| 02. திரு. எல்.ஏ.என்.ஜே. விமலரத்ன | அ.மு.உ. I | 2013.01.07 |
| 03. திருமதி வை.வீ.எஸ்ஜீ. யட்டிவல | வே.உ.தி.உ. | 2013.02.27 |
| 04. திரு. பீ.ஏ. ஜயசாந்த | சாரதி I | 2013.06.03 |
| 05. செல்வி கே. பீ. சுரங்கிகா | அ.சே.ஊ. III | 2013.09.02 |
| 06. திருமதி கே.டீ. தில்ஹானி | இ.உ. | 2013.09.20 |
| 07. திருமதி எச்.பீ. நதீகா தமயந்தி | இ.உ. | 2013.09.20 |
| 08. திருமதி முதிதா கொலொன்ன | இ.த.தொ.சே. III | 2013.11.23 |
| 09. திருமதி சாமிகா தீபாலி சேனாநாயக்க | வே.உ.தி.உ. | 2013.11.11 |
| 10. திருமதி ஏ.ஜீ. அனுலா விஜேரத்ன | இ.க.சே. I | 2013.11.14 |

சேவையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள்

| பெயர் | பதவி | ஓய்வுபெற்ற திகதி |
|---|---|---|
| 01. திரு. டீ.ஆர். வெத்தசிங்க | சாரதி | 2013.08.06 |
| 02. திருமதி பீ.ஏ. பீரிஸ் | பி.க. | 2013.11.05 |

சேவையிலிருந்து நீங்கிய உத்தியோகத்தர்கள்

| பெயர் | பதவி | நீங்கிய திகதி |
|---|---|---|
| 01. திருமதி டபிள்யு.ஐ.பீ. பியதுங்க | இ.உ. | 2013.06.01 |
| 02. திருமதி பீ. ஹசந்தி குமுதினி | இ.உ. | 2013.08.30 |

**பதவியணியினருக்கான பயிற்சி 2013**

நிறுவனமொன்றின் பதவியணியை பயிற்றுவித்தலானது சேவை வினைதிறனுக்கும் உற்பத்திதிறனுக்கும் பெரிதும் உதவியாயமைகின்றது. இந்த அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல உத்தியோகத்தர்கள் 2013 ஆம் ஆண்டில் உள்நாட்டு ரீதியாக பல பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளில் கலந்து கொண்டுள்ளனர். 2013 ஆம் ஆண்டினுள் அமைச்சின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் வெளிநாட்டுப் பயிற்சிக்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதோடு 2013 ஆம் ஆண்டில் அமைச்சின் பதவியணியினருக்கு வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சிப் பாடநெறிகள் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பாடநெறியின் பெயர் | கலந்து கொண்டோரின் பெயர் | நடைபெற்ற இடம் | திகதி |
|---|---|---|---|
| சிகாஸ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | திருமதி கே.ஆர்.சீ. குமுதினி | மிலோதா நிறுவனம் கொழும்பு 01 | 2013.01.28-2013.02.02 |
| அரச நிதி முகாமைத்துவம் பற்றிய பயிற்சி | செல்வி ஆர்.பீ.யு. ஸ்ரீமாலி | அரச சேவை பயிற்சி நிறுவனம் - கொழும்பு 07 | 2013.02.18-2013.02.22 |
| அ.மு.உதவியாளர் சேவையின் புதிய உத்தியோயாகத்தர்களுக்கான 10 நாள் சேவை ஆரம்பப் பயிற்சிப் பாடநெறி | திருமதி என்டீ. விக்கிரமாரச்சி | நில அளவைத் திணைக்களம் | 2013.02.18-2013.03.04 |
| மனித வள முகாமைத்துவம் | திரு. எஸ்.எச்.யு.என் தம்மிக | அரச சேவை பயிற்சி நிறுவனம் - கொழும்பு 07 | 2013.03.18-2013.03.22 |
| மனித வள முகாமைத்துவம் | திருமதி பீ.ஜீ.டபிள்யு.ஏ.ஜே. ஜயசிங்க | அரச சேவை பயிற்சி நிறுவனம் - கொழும்பு 07 | 2013.03.18-2013.03.22 |
| அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | திருமதி டீ.எம்.ஐ. மேரிஸ் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | 2013.03.27-2012.04.27 |
| வீடியோ பதிப்பு | திரு. என்.பீ. களுதொட்ட | கிளச் ஒடோ மேஷன் பிரைவேட் லிமிட்றட் | 2013.08.21-2013.08.24 |
| அரச கணக்காய்வு அலுவல்கள் பற்றிய பாடநெறி | திருமதி எஸ்.டீ.கே.ஆர். ஆரியரத்ன | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | 2013.09.17-2013.09.18 |
| சிகாஸ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | திருமதி ஆர்.எச்.சீ.பீ.கே. ரணமுக்க | மிலோதா நிறுவனம் | 2013.12.12 |

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இப் பிரிவின் மூலம் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் நிறைவேற்றப்படுகின்றன. முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக முகாமைத்துவக் குழு கூடி கலந்துரையாடியதோடு செயலாளரின் அறிவுரைகளின் பிரகாரம் விடயங்களைப் பற்றி ஆராய்ந்து முன்மொழிவுகளும் அவதானிப்புகளும் சமர்ப்பிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**<u>கூட்டங்கள் நடைபெற்ற திகதிகளும் கூட்டங்களைப் பற்றிய விபரமும்</u>**

| | |
|---|---|
| 2013.01.29 | ஆரம்ப அறிக்கையை சமர்ப்பித்தல் மற்றும் 2012 நான்காவது காலாண்டுக் கூட்டம் |
| 2013.05.10 | 2013 முதலாவது காலாண்டுக் கூட்டம் |
| 2013.07.30 | 2013 இரண்டாவது காலாண்டுக் கூட்டம் |
| 2013.10.25 | 2013 மூன்றாவது காலாண்டுக் கூட்டம் |

**<u>பங்குபற்றிய உத்தியோகத்தர்கள்</u>**

தலைவர் - திருமதி பிரின்சி ஜயதுங்க, செயலாளர் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

அழைப்பாளர் - திருமதி சந்திரா மியனவல - மேலதிக செயலாளர், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

அங்கத்தவர் - திருமதி பீ.ஏ. பீரிஸ் - பிரதம கணக்காளர், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

அங்கத்தவர் - எச்.சீ.டீ.எல். சில்வா - பணிப்பாளர் - முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

அங்கத்தவர் - திரு. ஏ. ஹப்புகல - பணிப்பாளர் - முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

அவதானிப்பாளர் - திருமதி ரம்யா பெரேரா - கணக்காய்வு அத்தியட்சகர் - கணக்காய்வுத் திணைக்களம்

அமைச்சின் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு, முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டுக் கூட்டங்கள் உரிய விதத்தில் நடத்தப்பட்டுள்ளன. வினைத்திறனும், உற்பத்திதிறனும் உறுதிசெய்யப்படுகின்ற விதத்தில் அமைச்சின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்குகின்றவாறு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அது தொடர்பில் பாராட்டத்தக்கதொரு நிலைமை காணப்படுகின்றதாக கூட்ட அமர்வுகளின்போது தெரிவிக்கப்பட்டது.

## கௌரவ அமைச்சரின் பதவியணி


| | | |
|---|---|---|
| | திருமதி சுமேதா ஜீ. ஜயசேன | கௌரவ அமைச்சர் |
| 01. | திரு. பி.ஐ.ஐ. த சில்வா | பிரத்தியேக செயலாளர் |
| 02. | திரு. டபிள்யு.எம்.எஸ். விஜேகோன் | ஊடக செயலாளர் |
| 03. | திரு. டீ.எம்.ஏ.ஐ. திசாநாயக்க | இணைப்புச் செயலாளர் |
| 04. | திரு. ரத்னசிறி வாதசிங்க | இணைப்புச் செயலாளர் |
| 05. | திருமதி ரேணுகா நவகமுவ | உதவிச் செயலாளர் தொழில் உறவுகள் (இ.நி.சே. அல்லாத) |
| 06. | திரு. டீ.கே.ஆர். வீரசேகர | ஆலோசகர் |
| 07. | திரு. எச்.டளிப்யு. அஜித் பிரியந்த | மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் |
| 08. | திரு. இந்துநில் கலப்பத்தி | பிரத்தியேக உதவியாளர் |
| 09. | தரு. ஆர்.எம். நிஷ்ஷங்க ரத்நாயக்க | முகாமைத்துவ உதவியாளர் |
| 10. | திரு. டீ.எம். நவரத்ன | முகாமைத்துவ உதவியாளர் |
| 11. | திரு. எம்.பி.பி. குணவர்தன | முகாமைத்துவ உதவியாளர் |
| 12. | திரு. பீ.சீ.சீ. சில்வா | முகாமைத்துவ உதவியாளர் |
| 13. | திரு. நீல் குமார ரத்நாயக்க | முகாமைத்துவ உதவியாளர் |
| 14. | திரு. பீ.பீ. குணரத்ன | சாரதி |
| 15. | திரு. டீ.எம். உபேவர்தன | சாரதி |
| 16. | திரு. டபிள்யு.டீ.ஏ. குணவர்தன | சாரதி |
| 17. | திரு. என்.உம்.எஸ்.பீ.பி. விஜேரத்ன | சாரதி |
| 18. | திரு. டபிள்யு.எம். ஜயவர்தன | சாரதி |
| 19. | திரு. திஸ்ஸ தர்மதாச | சாரதி (இணைந்த சேவை) |
| 20. | திரு. டீ.எம்.ஏ.பி. ஆரியரத்ன | சாரதி (இணைந்த சேவை) |
| 21. | செல்வி எச்.எச். சுமுது நிரோஷா | அலுவலக உதவியாளர் |
| 22. | திருமதி எச்.எம்.ஈ.எம். குணதிலக | அலுவலக உதவியாளர் |

## பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் பதவியணி


| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | திருமதி பிரின்சி ஜயதுங்க | செயலாளர் |
| 02. | திருமதி சந்திரா மியனவல | மேலதிக செயலாளர் |
| 03. | திரு. வஜிர கம்புருகமுவ | சிரேஷ்ட உதவிச் செயலாளர் |
| 04. | திரு. ஆர்.ஏ.டீ.சீ. குணசேகர | பணிப்பாளர் |
| 05. | திருமதி பி.ஏ. பீரிஸ் (2013.11.05 வரை) திருமதி ஏ.ஜீ. அனுலா விஜேரத்ன (2013.11.14 முதல்) | பிரதம கணக்காளர் |
| 06. | திரு. ஆர்.எச்.சீ.பி.கே. ரணமுக்க | கணக்காளர் |
| 07. | திருமதி எச்.ஏ.சீ. பெரேரா | உதவிச் செயலாளர் (பதில் கடமை) |
| 08. | திருமதி வியோனி பர்னாந்து | இணைப்புச் செயலாளர் |
| 09. | திருமதி ஏ.டபிள்யு.சீ. திசாநாயக்க | அ.மு.உ.சே. I |
| 10. | திருமதி டீ.எச்.எஸ். பிரியாணி | அ.மு.உ.சே. I |
| 11. | திரு. எல்.ஏ.என்.ஜே. விமலரத்ன | அ.மு.உ.சே. I |
| 12. | திருமதி டீ.எம். ஜராங்கனீ | அ.மு.உ.சே. II |
| 13. | செல்வி பீ.என்.சீ.பி. பெரேரா | அ.மு.உ.சே. II |
| 14. | திருமதி பீ.ஜீ.டபிள்யு.ஏ.ஜே. ஜயசிங்க | அ.மு.உ.சே. II |
| 15. | திருமதி டீ. சுனேத்ரா வெத்தசிங்க | அ.மு.உ.சே. II |
| 16. | திருமதி பீ.ஜீ.டீ. ரத்னபிரபா | அ.மு.உ.சே. II |
| 17. | திருமதி ஆர்.கே. சமிலா குமுதினீ | அ.மு.உ.சே. III |
| 18. | திரு. டபிள்யு. சந்திரதாச | அ.மு.உ.சே. III |
| 19. | திருமதி டபிள்யு.எஸ்.எம்.ஜே. பர்னாந்து | அ.மு.உ.சே. III |
| 20. | திருமதி என்.டீ. விக்கிரமஆரச்சி | அ.மு.உ.சே. III |
| 21. | செல்வி ஆர்.பீ.யு. ஸ்ரீமாலி | அ.மு.உ.சே. III |
| 22. | திரு. என்.பி. களுதொட்ட | இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை III |
| 23. | திருமதி முதிதா கொலொன்னெ | இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை III |
| 24. | திரு. ஆர்.பி.யூ.எஸ். ராஜபக்ஷ | நிகழ்ச்சித்திட்ட திட்டமிடல் உதவியாளர் |
| 25. | திரு. எஸ்.எச்.யு.என். தம்மிக்க | நிகழ்ச்சித்திட்ட திட்டமிடல் உதவியாளர் |

| | | |
|---|---|---|
| 26. | திரு. யு.எல்.சீ. இந்துனில் | கொள்வனவு வழங்கல் உதவியாளர் |
| 27. | திரு. ஆர்.எம்.பி.பி. கருணாரத்ன | நிகழ்ச்சித்திட்ட திட்டமிடல் உதவியாளர் |
| 28. | திருமதி ஆர்.எம்.எம்.பி. ரத்நாயக்க | நிகழ்ச்சித்திட்ட திட்டமிடல் உதவியாளர் |
| 29. | திருமதி நிர்மலா விஜேசுந்தர | நிதி உதவியாளர் |
| 30. | திருமதி எஸ்.டீ.கே.ஆர். ஆரியரத்ன | நிதி உதவியாளர் |
| 31. | திரு. எச்.ஏ.எஸ்.பி. பிரியங்கர | நிதி உதவியாளர் |
| 32. | திருமதி வை.வீ. சமந்தி கங்கா யட்டிவல | நிகழ்ச்சித்திட்ட திட்டமிடல் உதவியாளர் |
| 33. | செல்வி சீ.டீ. சேனாநாயக்க | நிகழ்ச்சித்திட்ட திட்டமிடல் உதவியாளர் |
| 34. | செல்வி கே.எச். ஸ்வர்ண ஶ்ரீ | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 35. | செல்வி கே.டீ. தில்ஹானி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 36. | செல்வி எச்.பி. நதீகா தமயந்தி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 37. | செல்வி எஸ்.ரீ.ஆர். செனெவிரத்ன | வரவேற்பு உத்தியோகத்தர் |
| 38. | திரு. ஐ. ஜயவீர | அ.சே.ஊ. I |
| 39. | திரு. ஜீ.ஜீ. விஜேரத்ன பண்டா | அ.சே.ஊ. I |
| 40. | திரு. எஸ்.டீ. ஆனந்த | அ.சே.ஊ. I |
| 41. | திரு. பி. முருகண்டி | அ.சே.ஊ. I |
| 42. | திரு. சம்பத் துமிந்த தொம்பகே | அ.சே.ஊ. III |
| 43. | திரு. ஜீ.யு. விமலசிறி குருசிங்க | அ.சே.ஊ. III |
| 44. | திரு. ஆர்.எம்.டீ.பி. ரத்நாயக்க | அ.சே.ஊ. III |
| 45. | திருமதி மாரி பிலீஷியா ரணவீர | அ.சே.ஊ. III |
| 46. | திருமதி கே. சுரங்கிகா | அ.சே.ஊ. III |
| 47. | திரு. கே.டபிள்யு. பிரேமதிலக | சாரதி I |
| 48. | திரு. விமலசிறி ஹேவாமான | சாரதி II (ஆ) |
| 49. | திரு. கே.வீ.எஸ். ஜயரத்ன | சாரதி II (ஆ) |
| 50. | திரு. சம்பத் சுரங்க தெடிகம | சாரதி II (ஆ) |
| 51. | திரு. பீ.எம். ஆரியதிலக | சாரதி II (ஆ) |
| 52. | திரு. ரீ.ஏ.கே.பீ. திலகரத்ன | சாரதி II (ஆ) |
| 53. | திரு. ஜே.எம்.கே.எஸ். விஜேரத்ன | சாரதி II (ஆ) |

## நிருவாகக் கட்டமைப்பு – பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு



ගරු පාර්ලිමේන්තු මන්ත්‍රී කාර්ය මණ්ඩල පුහුණුව ආවරණය කල දිස්ත්‍රික්ක - 2013







රත්නපුර, කෑගල්ල දිස්ත්‍රික්ක වල මන්ත්‍රී කාර්ය මණ්ඩල පුහුණු වැඩසටහන - සී/ස රත්නපුර දිස්ත්‍රික් සමූපකාර ග්‍රාමීය බැංකු සංගම් ශ්‍රවණාගාරය, නව නගරය රත්නපුර - 2013.09.25/26

இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியணிக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - வ/ப இரத்தினபுரி மாவட்ட கிராமிய வங்கிச் சங்கம் கேட்போர் கூடம், புதிய நகரம் இரத்தினபுரி - 2013.09.25/26

Training Workshop for Parliamentarian Staff of Rathnapura & Kagalle Districts Conducted at the Auditorium of the Rathnapura District Cooperative Rural Bank Society Ltd. – 25/26.09.2013



යාපනය, වන්නි දිස්ත්‍රික්ක වල මන්ත්‍රී කාර්ය මණ්ඩල රියැදුරන් සහ අනෙකුත් දිස්ත්‍රික්ක වල දෙමළ මාධ්‍ය රියැදුරන් සඳහා වූ පුහුණු වැඩමුළුව - ඉදිකිරීම් හා යන්ත්‍රෝපකරණ පුහුණු ආයතනය, පැලවත්ත 2013.06.20

யாழ்ப்பாணம், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியின் சாரதிகள் மற்றும் ஏனைய மாவட்டங்களின் தமிழ் மொழிமூல சாரதிகளுக்கான பயிற்சிச் செயலமர்வு - நிர்மாணிப்பு, இயந்திர உபகரணங்கள் பயிற்சி நிறுவனம், பெலவத்தை - 2013.06.20

Training Workshop Conduct for Drivers in the Staffs of Parliamentarians in Jaffna & Wanni Districts and for Drivers of Tamil Stream in other Districts – Training Institute of Construction and Machinery at Pelawatta –



ගාල්ල, මාතර, හම්බන්තොට දිස්ත්‍රික්ක වල ප්‍රාදේශීය ලේකම්වරුන් සඳහා පාර්ලිමේන්තු කාරක සභා අණපනත් වැඩමුළුව - දකුණු පළාත් කළමනාකරණ පුහුණු ආයතනය, වක්වැල්ල - 2013.02.21

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களின் பிரதேச செயலாளர்களுக்கான பாராளுமன்றக் குழுக்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் பற்றிய செயலமர்வு - தென் மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிறுவனம் வக்வெல்ல - 2013.02.21

Workshop Conducted for Divisional Secretaries of Galle, Matara, Hambantota Districts on Parliamentary Committee Enactments – Southern Province Management Training Institute at Wakwella – 21.02.2013





අමාත්‍යාංශ කාර්ය මණ්ඩලය සඳහා වූ බැහැරගත පුහුණු වැඩසටහන - සමෘද්ධි පුහුණු ආයතනය, සමනලවැව - 2013.07.20/21

அமைச்சின் பதவியணிக்கான வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - சமுர்தி பயிற்சி நிறுவனம் - சமனலவெவ - 2013.07.20/21

Outbound Training Programme for Ministry Staff- Samurdhi Training Institute at Samanalawewa – 20/21.07.2013



පුත්තලම, කුරුණෑගල දිස්ත්‍රික්ක වල ප්‍රාදේශීය ලේකම්වරුන් සඳහා පාර්ලිමේන්තු කාරක සභා අණපනත් වැඩමුළුව වයඹ පළාත් කළමනාකරණ පුහුණු ආයතනය - වාරියපොල 2013.05.14

புத்தளம், குருணாகல் மாவட்டங்களின் பிரதேச செயலாளர்களுக்கான பாராளுமன்றக் குழுக்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் பற்றிய செயலமர்வு - வடமேல் மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிறுவனம், வாரியபொல - 2013.05.14

Workshop Conducted for Divisional Secretaries of Puttalam & Kurunegala Districts on Parliamentary Committee Enactments – North Western Province Management Training Institute at Wariyapola – 14.05.2013



පුත්තලම, කුරුණෑගල දිස්ත්‍රික්ක වල පාර්ලිමේන්තු මන්ත්‍රී කාර්ය මණ්ඩලයට පැවැත්වූ වැඩමුළුව වයඹ පළාත් කළමනාකරණ පුහුණු ආයතනය - වාරියපොල 2013.05.15/16

புத்தளம், குருணாகல் மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்கு நடத்தப்பட்ட செயலமர்வு, வடமேல் மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிறுவனம், வாரியபொல - 2013.05.15/16

Workshop Conducted for Parliamentarians staff of Puttalam & Kurunegala Districts– North Western Province Management Training Institute at Wariyapola – 15/16.05.2013



පුත්තලම, කුරුණෑගල දිස්ත්‍රික්ක වල පාර්ලිමේන්තු මන්ත්‍රී කාර්ය මණ්ඩලයට පැවැත්වූ වැඩමුළුව වයඹ පළාත් කළමනාකරණ පුහුණු ආයතනය - වාරියපොල 2013.05.15/16
புத்தளம், குருணாகல் மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்கு நடத்தப்பட்ட செயலமர்வு, வடமேல் மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிறுவனம், வாரியபொல - 2013.05.15/16
Workshop Conducted for Parliamentarians staff of Puttalam & Kurunegala Districts– North Western Province Management Training Institute at Wariyapola – 15/16.05.2013



අනුරාධපුර, පොළොන්නරුව, බදුල්ල, කළුතර දිස්ත්‍රික්ක වල හා පෙර වැඩසටහන් වලට සහභාගී නොවුණු රියැදුරන් සඳහා පුහුණු වැඩමුළුව - ඉදිකිරීම් හා යන්ත්‍රෝපකරණ පුහුණු ආයතනය පැලවත්ත 2013.06.18
அனுராதபுரம், பொலனறுவை, பதுளை, களுத்துறை மாவட்டங்களின் மற்றும் முன்னைய நிகழ்ச்சித்தித் திட்டங்களில் கலந்துகொள்ளாத சாரதிகளுக்கான பயிற்சிச் செயலமர்வு - நிர்மாணிப்பு, இயந்திர உபகரணங்கள் பயிற்சி நிறுவனம், பெலவத்தை - 2013.06.18
Workshop Conducted for Drivers of Anuradhapura, Polonnaruwa, Badulla & Kalutara Districts and for Who did not Attend Previous programmes - Training Institute of Construction and Machinery at Pelawatta – 18.06.2013



රත්නපුර, කෑගල්ල දිස්ත්‍රික්ක  වල ප්‍රාදේශීය ලේකම්වරුන් සඳහා පාර්ලිමේන්තු කාරක සභා අණපනත් වැඩමුළුව - සී/ස රත්නපුර දිස්ත්‍රික් සමුපකාර ග්‍රාමීය බැංකු සංගම් ශ්‍රවණාගාරය, නව නගරය රත්නපුර - 2013.09.24

இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களின் பிரதேச செயலாளர்களுக்கான பாராளுமன்றக் குழுக்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் பற்றிய செயலமர்வு - வ.்.ப இரத்தினபுரி மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்க கேட்போர்கூடம், புதிய நகரம் இரத்தினபுரி - 2013.09.24

Workshop on Parliamentary Committee Enactments for Divisional secetaries of Rathnapura & Kagalle Districts at the Auditorium of the Rathnapura District Cooperative Rural Bank Society Ltd. – 24.09.2013





යහපාලනය ග්‍රන්ථයේ දෙමළ භාෂා පරිවර්තනය එළි දැක්වීම - ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික් ලේකම් කාර්යාල ශ්‍රවණාගාරය - 2013.12.04

நல்லாட்சி பற்றிய நூல் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியீடு - திருகோணமலை மாவட்ட செயலகம் கேட்போர்கூடம் - 2013.12.04

Launching the Good Governance Book “Tamil Version” - at the Auditorium of the District secretariat office, Trincomalee



ත්‍රිකුණාමලය, දිගාමඩුල්ල, මඩකලපුව දිස්ත්‍රික්ක වල පාර්ලිමේන්තු මන්ත්‍රී කාර්ය මණ්ඩලය සඳහා පැවැත්වූ වැඩමුළුව - කළමනාකරණ සංවර්ධන පුහුණු දෙපාර්තමේන්තුව - උප්පුවේලි, ත්‍රිකුණාමලය - 2013.12.04/05

திருகோணமலை, திகாமடுல்ல, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்காக நடத்தப்பட்ட செயலமர்வு - முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் - உப்புவேலி, திருகோணமலை - 2013.12.04.∵05

Workshop Conducted for Parliamentarians staff of Trincomalee, Digamadulla & Batticaloa Districts– Management Training Institute at Uppuweli, Trincomalee – 04/05.12.2013



පුත්තලම, කුරුණෑගල දිස්ත්‍රික්ක වල පාර්ලිමේන්තු මන්ත්‍රී කාර්ය මණ්ඩල සඳහා පැවැත්වූ වැඩමුළුව - වයඹ පළාත් කළමනාකරණ පුහුණු ආයතනය, වාරියපොල - 2013.05.15/16

புத்தளம், குருணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணிக்காக நடத்தப்பட்ட செயலமர்வு - வடமேல் மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிறுவனம், வாரியபொல - 2013.05.15.∵16

Workshop Conducted for Parliamentarians staff of Puttalam & Kurunegala Districts– North Western Province Management Training Institute at Wariyapola – 15/16.05.2013